# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1712/17 - 2011 ජූනි 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.06.30

*1712/17 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : உது/2/5/2/56ஏ.
காணி அமைச்சின் குறிப்பு இல. : 13/97/எப்ஆர்/151ஏ.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், உடதும்பர பிரதேச செயலாளர் பிரிவில், கரம்பகெட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள, நில அளவை நாயகத்தின் மஹ 6142 ஆம் இலக்க வரைபடத்தில் 1 ஆம் இல. 0.1473 ஹெக்டயார் மற்றும் 2 ஆம் இல. 1.8683 ஹெக்டயார்ஸ் மற்றும் 3 ஆம் இல. 4.8861 ஹெக்டயார்ஸ் மற்றும் 4 ஆம் இல. 8.0879 ஹெக்டயார்ஸ் கொண்ட முழு விஸ்தீரணத்தில் 14.9914 ஹெக்டயார்ஸ் உடைய "வின்ச்பீல்ட் பார்க் வத்த" எனும் காணியின் விபரம் :

உரிமை கோருபவர் : திருமதி எச். எம். டீ. ஜீ. பொடிமெனிகே, கந்தேகம, உடதும்பர.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2011 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 03 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு உடதும்பர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2011 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யூ. எம். எம். ஜீ. அபேசிங்ஹ பண்டா,
பிரதேச செயலாளர்,
உடதும்பர.

பிரதேச செயலகம்,
உடதும்பர,
2011.06.14.

07-378

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல. : ல/பி.செ/313/5/2/33.
காணி அமைச்சின் குறிப்பு இல. : 13/00/எப்ஆர்/60.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மத்திய மாகாணத்தின், மாத்தளை மாவட்டத்தில், லக்கல பள்ளேகம பிரதேச செயலாளர் பிரிவில், லக்கல உடசிய பத்துவவில் பிடவெல கிராம சேவகர் பிரிவின், பிடவெல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2011.03.21 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. மா 1543 இல் துண்டு இல. 1, மொத்த விஸ்தீரணம் 9.7650 ஹெக்டயார்ஸ் கொண்ட கோனமடவத்த எனும் காணியின் விபரம்:

காணியின் பெயர் : கோனமடவத்த ; விபரம் : வனம் ; உரிமை கோருபவர்: அதுறு லியனகே சந்திரபால குணசிங்க, இல. 16, கென்சிங்டன் கார்டன், கொழும்பு 04 ; விஸ்தீரணம் : 9.7650 ஹெக்டயார்ஸ்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2011 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 29 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு லக்கல- பள்ளேகம பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2011 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பி. ஏ. சரத்சந்திர,
பிரதேச செயலாளர்,
லக்கல - பள்ளேகம.

பிரதேச செயலகம்,
லக்கல - பள்ளேகம,
2011.06.06.

07-379

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பி. செ. குறிப்பு இல. : கஹ/பிர/செ/கா/சுவீகரிப்பு/01/03(01).
காணி அமைச்சின் குறிப்பு இல. : 03ஜே/84/ஈ/440.

காணி எடுத்தற் சட்டத்தின் பிரிவு 07 இன் நியதிகளின் படி 482/14 ஆம் இலக்க 1987.12.03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் உரித்தினை சரிபார்க்கும் திகதி 1988.02.11 ஆந் திகதி மு.ப. 10.30 மணி என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ள போதிலும் 2011.09.13 மு. ப. 10.30 மணி என்று திருத்தம் செய்யப்படல் வேண்டும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

தயானந்த கொலம்பகம,
பிரதேச செயலாளர்,
கஹவத்த.

பிரதேச செயலகம்,
கஹவத்த,
2011.06.20.

07-380

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.